உ

சிவமயம்



கொழும்பை பிறப்பிடமாகவும்

அல்வாய் கிழக்கு வெள்ளுருவையை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் பத்மாவதி சதாசிவம்

அவர்களின் ஜீவயாத்திரை குறித்த

# நினைவு மலர்

## 07-01-2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



அன்பும் பண்பும்
அறமும் பாசமும் நேசமும் காட்டி
எம்மோடு ஆதரவுடனும்
ஒற்றுமையுடனும் வாழ்ந்து
இப்படித்தான் வாழவேண்டுமென்று
வாழ்ந்து காட்டிய எமது
அன்புத்தெய்வத்தின் பாதக்கமலங்களில்
இம் மலரைக்
காணிக்கையாக்குகின்றோம்

– குடும்பத்தினர் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



தோற்றம்
26.09.1926

மறைவு
08.12.2014

# அமரர் பத்மாவதி சதாசிவம்

## திதி நிர்ணய வெண்பா

பொங்கு ஜய வருட கார்த்திகை எட்டாம் நாள் தேய்பிறை – துதியையில்
சங்கப் பெருமைசேர் வெள்ளநுவை அல்வாய் கிழக்கு – மேல்பதியில்
நல்லகுலப் பெருமை பொங்கி வந்த நங்கையாம்
பத்மாவதி சதாசிவம் சித்தம் இனிப்பான் அடிசேர்ந்த திருநாளாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இளவயதில்



76 ஆவது பிறந்ததினத்தை கொண்டாடியபோது (சுவிஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறுவயதில்



திருமணத்தின் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# தோத்திரப்பாக்கள்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் வணக்கம்

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெல்லாம் எளிதின் முற்றுறக்
கண்ணுதல் உடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

## தேவாரம்

நீள நினைந்தடியே னுமை நித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்மடவா ளவள் வாடி வருந்தாமே
கோளிலி யெம்பெருமான் குண்டை யூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆளிலை யெம்பெருமா னவையட்டித் தரப்பணியே.

## திருவாசகம்

முத்திநெறியறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறியறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணஞ்
சித்தமலமறுவித்துச் சிவமாக்கியெனையாண்ட
அத்தனெனக்கருளியவாறார் பெறுவாரச்சோவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உவப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளருள்ளத் தானந்தக் கனியே
அம்பல மாடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனே விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள்
செய்தவன் மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாக
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஆதியாய் நடுவும் ஆகி அளவிலா அளவும் ஆகிச்
சோதியாய் உணர்வும் ஆகித் தோன்றிய பொருளும் ஆகிச்
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணும் ஆகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி! போற்றி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

துள்ளுமத வேட்கைக் கணையாலே
தொல்லை நெடு நீலக் கடலாலே
மெள்ள வரு சோலைக் குயிலாலே
மெய்யுருகுமானைத் தழுவாயே
தெள்ளு தமிழ்ப் பாடத் தெளிவோனே
செய்ய குமரேசத் திறலோனே
வள்ளல் தொழு ஞானக் கழலோனே
வள்ளி மணவாளப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் பத்மாவதி சதாசிவம் அவர்களின் திவ்ய ஜீவயாத்திரை குறித்த வேளையில் அவருக்கு நற்கதி பெறுமாறு வழிபடு தெய்வங்களைப் பாடிய துதிப்பாடல்கள்

### மாலைசந்தைப் பிள்ளையாரை வேண்டியது

ஆலும் அரசும் அயலே அழகார் மனைகளுமாய்
ஞாலம் செழித்திடச் சூழ் மாலை சந்தை விநாயகரே
கோலம் மிளிர்ந்திட வீற்றிருந்தாண்டிடும் ஐங்கரனே
சீலமாய் பத்மாவதி முத்தியின்பம் செய்தருளே.

### மந்திகை கண்ணகை அம்மையிடம்

மண்ணுலகில் தவம்புரிந்து வானோர் தங்கள்
வான்பமும் கவர்ந்தவரை வருத்தம் செய்த
தண்ணணியென்பது சிறிதும் இல்லாயந்த
தாளவாளாம் கிடனை முன்சம்பரில் சாய்ந்த
சண்டிகா பரமேஸ்வரியே! அம்மா!
தரைவிட்டே பத்மாவதி
உன்பாதம் தேடினார் மந்திகை வளமூர்மேவும்
உவிந்தருளும் அம்மையே! மோட்சம் காட்டே.

### வல்லிபுர மாயவனிடம் வேண்டுகை

வேஞ்குழலால் விண்ணோடு மண்ணும் விஞ்சும்
வேதனையை மறந்தின்பம் விரவிச் செய்யும்
தீங்கொழித்தல் தாய்மை தரும் திருவிளக்கே
தேடிரியமணிமார்பா! தேசுமிக்க
பாங்குடைய தெய்வீகப் பனுவலேயிப்
பார்போற்றி வணங்கும் பரந்தாமா! கண்ணா
தாங்கிய மண் உலகை விட்டே பத்மாவதி சேர்ந்துவிட்டார்
உன் பாதமலரடிக்கீழ் ஏற்றுக்கொள்ளே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குலதெய்வம் வெள்ளிருவை வைரவரை வேண்டுகை

எங்களின் பூர்வீகமப் பதியது தன்னிலே
ஏற்றமாய் கோயில் கொண்ட வெள்ளுருவையின்
மங்கல நாயகனே வைரவா! நாய்வாகனனே!
மாட்சிமை தானோங்கும் மகிமை சேர் சேத்திரனே!
பாங்குடனே பொங்கல்கள் நேர்த்திகள் உபயங்கள்
பரவசமாய் செய்துந்தன் கோயில்தனிற்கு
பொங்கிடும் அன்பு பக்தியுடன் எம் தாயவளை இக்கணமே
பூவுலககன்று வருகின்றார் பரிவுடனே ஏற்பாயே!



- இறைவனின் பிரதிவடிவமே அம்மா.......!

  \- அவளே -

  குழந்தையின் முகவரியாகின்றாள்

  \- மீராசிவகாமி -

- தாய் தனது கண்ணீரை மறைத்து - பிள்ளையின் புன்னகைக்காக தினமும் உழைக்கின்றாள்.
- அன்புக்கு அடையாளமாக
  ஆண்டவன் அனுப்பிய
  அற்புத ஜீவனே அம்மா

  \- வைரமுத்து -

- கண்களால் காணக்கூடிய அன்பான
  பிரம்மாவே தாய்

  \- மீராசிவகாமி -

- "எதிர்பார்ப்பற்ற அன்பின் அகராதியே தாய் ஆவாள்"

  \- மீராசிவகாமி -

- மனிதகுலத்தின் அதியுள்ள உதவே தாய்மை

  \- மீராசிவகாமி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் பத்மாவதி சதாசிவம் அவர்களின்
# வாழ்க்கைச்சுவடுகள்....

ஈழவளநாட்டின் தலைநகராம் கொழும்பில் கொம்பனித்தெரு எனுமிடத்தில் கந்தையா இரத்தினம் தம்பதியினருக்கு சிரேஸ்ட புத்திரியாக 26.09.1926 ஆம் திகதி பத்மாவதி பிறந்தார். அவரது சிறுவயதிலேயே தந்தையார் மறைந்தமையால், அவரது பெற்றோர், பொலீஸ் அதிகாரியான முத்தையா என்பவரை தாயாருக்கு மறுமணம் முடித்து வைத்தனர். அதன் பயனாக நவமணி அம்மாள், சறோஜினி அம்மாள், ருக்மணி அம்மாள், அனந்தராஜா ஆகிய சகோதரர்கள் பிறந்தனர். இவர்களை சிறுவயதிலேயே தந்தையார் இந்தியாவுக்கு அழைத்துச் சென்றார். தாயாரின் மறைவுக்குப் பின்னர் பத்மாவதி அவர்கள் தனது உறவினருடனேயே வளர்ந்து வந்தார்.

சிறுவயதிலிருந்து நற்பண்புகளுடன் வளர்ந்த இவர் கொழும்பு சைவமங்கையர்கழத்தில் தனது ஆரம்பக்கல்வியையும் இடைநிலைக்கல்வியையும் கற்றார். தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் திறமை பெற்றிருந்தார். திருமண வயதை அடைந்தவேளை வடமராட்சி அல்வாய் கிழக்கு வெள்ளுருவை எனும் கிராமத்தில் அவரது உறவினருடன் வாழ்ந்த காலத்தில் அவ் ஊரைச் சேர்ந்த இளையதம்பி பார்வதி தம்பதியினருக்குப் பிள்ளையான பொலிஸ் உத்தியோகத்தராகக் கடமையாற்றிய சதாசிவம் என்பவரை 1947ம் ஆண்டு கரம்பிடித்தார்.

திருமணத்தின் பின்னர் கணவர் கடமையாற்றிக்கொண்டிருந்த மருதானைக்கு கணவருடன் சென்றார். ஈழத்தின் பல பாகங்களிலும் கணவர் வேலையின் நிமித்தம் இடம் மாற்றலாகி சென்றபோதெல்லாம் அவருடன் கூடவே சென்றார்.

இவர்களின் இனிய இல்லற வாழ்வின் பயனாக சற்குணராஜா சற்குணவதி, சற்குணராணி, சற்குணேஸ்வரி, சற்குணநாதன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்குணதிலகம், சற்குணேந்திரன், சற்குணலிங்கம் ஆகிய பிள்ளைகளைப் பெற்றெடுத்தனர். பிள்ளைகள் யாவருக்கும் சிறந்த கல்வியை வழங்கினார். பிள்ளைகள் திருமண வயதை அடைந்தவேளை அவர்களுக்கு ஏற்ற துணையைத் தேடி மணம் முடித்துக் கொடுத்தனர். குண்டசாலை விவசாயக் கல்லூரியில் கற்றுத் தேர்ந்து ஹிங்குரான சீனித்தொழிற்சாலையில் கடமையாற்றிக் கொண்டிருந்த மூத்த மகன் சற்குணராசாவிற்கு (சுவிஸ்) அதே கல்லூரியில் கல்வி கற்று அவருடன் சேவையாற்றிய விஜயதேவி என்பவரையும், மூத்த மகள் சற்குணவதிக்கு தலைமன்னாரில் Wireless Operator ஆக இருந்த ஏரன் செல்லையா என்பவரையும், மருத்துவமாதாவாக கடமையாற்றிய சற்குணராணிக்கு, நவரண்டம் (சவுதிஅரேபியா) என்பவரையும், லண்டனில் வசிக்கும் சற்குணநாதனக்கு ஜீன் என்பவரையும், ஆசிரியராகக் கடமையாற்றும் சற்குணதிலகத்திற்கு, வலயக் கல்விப்பணிப்பாளராக இருந்த வேணுகோபால வாணிதாசன் என்பவரையும், சற்குணேஸ்வரிக்கு இராசதுரை என்பவரையும், லண்டனில் வசிக்கும் சற்குணேந்திரனுக்கு மாலா என்பவரையும், லண்டனில் வசிக்கும் சற்குணலிங்கத்திற்கு சாந்தமலர் என்பவரையும் மணம் முடித்துக் கொடுத்தனர். பிள்ளைகளின் இனிய இல்லறவாழ்வின் பயனாக, பாலகுமார், அஜன், நிலானி, நீல்ராஜ்குமார், கிருஷாந்தினி, பிரசாந்தன், பாலமுரளி, பார்த்தீபன், உதயராஜ், ஜனகன், கெவின்ஜூலி டெபோறா, கோபிகா, யதிஷ்வர்யா, யுவஸ்திகா, நீரஜா, சுகல்யா, நிரூசன், ஜோய், எஸ்தர், ஜொனத்தன் ஆகிய பேரப்பிள்ளைகளையும், சயநாரா, அகேஷியா, யூத்திரன், நிறஞ்சன், நிவேதா, நைஜல், மிஷல், இசபெல், அஸ்விகா, காவியா, திவர்ஷிகா, சுவாதி ஆகிய பூட்டப்பிள்ளைகளையும் கண்டு மகிழ்ந்தார். கணவரின் ஓய்வுக்குப் பின்னர் கணவருக்கு அயராது சேவை ஆற்றினார். ஐம்பது வருட இல்லறவாழ்வின் பின்னர் திடீர் சுகயீனம் காரணமாக கணவர் 1997ல் உயிர் நீத்தார். பின்னர் அவரது பெண்பிள்ளைகளுடனும், பேரப்பிள்ளைகளும் வாழ்ந்த காலத்தில் 2002ம் ஆண்டு மூத்த மகன் சற்குணராசா அன்னாரை சுவிற்சலாந்துக்கு அழைத்துச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றார். அங்கு அவர் மூத்தமகனுடன் சிலகாலம் தங்கியிருந்தார்.

2004ம் ஆண்டு கணவனை இழந்த இளைய மகளின் சோகம் அன்னாரை வாட்டியது. நொந்து போன இளையமகளும், பேரப்பிள்ளைகளும் அவரது அன்பிலும், அரவணைப்பிலும் ஆறுதல் அடைந்தனர். இறுதிவரை அவர்களுடன் கூடவே வாழ்ந்தார்.

அமைதியின் சொரூபமான, பொறுமைக்கு இலக்கணமான அன்னார் உற்றார் உறவினரின் அன்புக்குப் பாத்திரமாக விளங்கினார். எண்பத்தெட்டு வருடங்கள் மண்ணுலக வாழ்விலும், ஐம்பது வருடங்கள் இல்லற வாழ்விலும் இணைந்து 08.12.2014 அன்று திங்கட்கிழமை துதியை திதியில் இவ்வுலக வாழ்வை நீத்து இறைவனடி சேர்ந்தார்.

அமரர் பத்மாவதி சதாசிவம் அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

- தாய்மையின் முதல் முத்தமே
  குழந்தை ஒன்றுக்கு கிடைக்கும்
  நம்பிக்கையின் சத்தமாகும்.

- மீராசிவகாமி -

- அன்பைச் சொல்ல ஆயிரம் உறவுகள்
  இருந்தாலும், அன்பாய்ச்சொல்ல,
  தாய் போல் எந்த உறவும் இல்லை

- மனுஷபுத்திரன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகளின் இதயத்தில் இருந்து..........

### சற்குணம்

அம்மா! வாழ்வின் ஆதாரமானவளே
முதல் பிறந்த முத்து முதல் அன்பு காட்டினாய்
"பெரியவன், பெரியவன்" என்று பெருமிதத்தோடு அழைப்பாய்
உலகின் உன்னதத்தை ஒவ்வொன்றாய் கூறி நின்றாய்
கருவிலே திரு அமைந்ததனால் கண்ணியமாய் வாழவைத்தாய்
காற்றின் காதுகளில் கனிந்து வரும் உன் சத்தம்
நேற்றுவரை கேட்டது தம்பி, தம்பி..... என்று
இன்று எங்கே?
இல்லை, இல்லை இன்றும் கேட்கிறது இதயம் வரை......
மாற்றிவிட்டாய் எம் வாழ்வை
வளமுடனே நாம் வாழ
ஏற்றிவைத்த தீபமே எமக்கு ஒளி காட்டி நின்றாய்
நாற்றிசையும் தேடுகின்றோம்!

### ராணி (சற்குணவதி)

தாயே! தரணியில் எனக்கு அடையாளம் தந்தவளே
"உன்னைப்போல் நான்" என உலகோர் கூறுவர்
உன் உருவம் தந்து, உயிர் தந்து
நல்லபடி வாழவைத்தீர் "ராணியாக......."
எண்ணிப் பார்க்கின்றேன்
உன் அன்பு அகராதியை
ஆயுள் போதாது உம்மை கணக்கெடுக்க
அற்புதம் என்று நிமிர்ந்து நின்ற உம் வாழ்வு
அச்சமின்றி எமை உச்சம் தொட வைத்து
வாழுகின்றோம்..... நாம் எல்லாம்
வாசல் வரை தேடுகின்றோம் உம்மை
எங்கே அம்மா......!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புஸ்பா (சற்குணராணி)

அம்மா! தாய்மையின் தனித்துவத்தை
தரணியில் காட்டியவளே - உன்னை
தாயாகப் பெற்றதனால் நானும் தவம் செய்தேன்
"புஸ்பா" என நாமமிட்டு புன்னகையுடன் வாழ வைத்தாய்
நித்தமும் எமக்காய் நீ உழைத்தாய்
சத்தமிட்டு கதையறியா சாந்தமுகத்தாளே
நித்தமும் உனை நினைத்து
நீள் விழி நனைகிறது
பக்கத்தில் இருந்து பௌத்திரமாய் கதை சொல்வாய்
அந்த நாளை எண்ணுகிறேன் அறிவாயே
எழுந்துவாராய்.

## சுபத்திரா (சற்குணேஸ்வரி)

அம்மா! என்னன்பே......
சுபத்திரா என்று அழைத்து நின்றாய்
கண்ணாக இமை காத்து நிற்பது போல்
பொன்னாக எமைப் பேணி
பொக்கிஷமாய் வளர்த்தாயே
பொல்லாத விதி அன்று வலது கை உடைக்க
நல்லாளே நீ புரிந்த சேவையெல்லாம்
எத்தனை ஜென்மத்திலும் நான் மறவேன்
வித்தகமே என்தாயே- நீ
செய்த அத்தனையும்
பெண்குலத்தின் மைல்கல் அன்றோ
எனை விட்டு எங்கே வெகுதூரம் சென்றுவிட்டாய்
மண்ணைவிட்டு விண்ணைத் தொட்ட மகத்துவமே - என்
கண்துடைக்க ஒரு தரம் வாராயோ!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராஜன் (சற்குணநாதன்)

பத்தொரு திங்களாக பாலகன் எனைச் சுமந்து பெற்றீர்
நித்தமும் புத்திகூறி நெறிமுறை கற்றுத்தந்தீர்
எப்பொழுதும் எமை நினைத்தே
நீர் வாழ்ந்த வாழ்வெல்லாம்
எப்படி கடன் செய்வேன் அம்மா
என் இதயம் அழுகுதையோ
உன் உருவம் காணவில்லை
உன் அருகில் அமரவில்லை - பொல்லாத விதி
வந்து என்னை பிடரியில் விரட்டிடவே
செல்லாத காசுபோல் அம்மா
உன் நினைவால் வாடுகின்றேன்
என் குரல் கேட்ட பின்பே ஆவி - நீ
நீத்தாய் என்ற அச்சேதி கேட்டபின் அம்மா
அலறி தனித்து இங்கு அழுகின்றேன்
எல்லையற்ற பாசந்தானே ஒரு தரம்
என் கண் முன் வாராயோ.

## திலகா (சற்குணதிலகம்)

அம்மா! என் ஆத்மாவின் ராகமே
நொந்து போன என் வாழ்வின்
நெம்புகோலாய் இருந்தவளே - அதனால் தான்
இத்தனையும் தாங்கி
முழுவதுமாய் என்னருகில் நீ இருந்தாய்
"திலகா" என்று நீ ஒரு தரம் பரிவுடனே அழைத்துவிட்டால்
விலகிவிடும் என் கவலை அக்கணமே
வாசல்வரை வந்து வழியனுப்பி வைத்து -மீண்டும்
வீடுவந்து சேருமட்டும் காத்திருக்கும் உன் பாசம்
பாதியிலே போனதென்ன
பிறந்தவுடன் எனைத் தொட்டணைத்த உன்கரங்கள்
ஓய்ந்தொருநாள் நான் கண்டதில்லை
பத்துநாள் படுக்கையில் படுத்திருந்தாய், பறந்து விட்டாய்
நடுக்கடலில் நிற்பது போல் ஓர் உணர்வு....
கருணை விளக்கே.... உன் ஒளியில் என் பயணம்
தாயே உங்கள் ஆசிக்காய் நான் யாசிக்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குணம் (சற்குணேந்திரன்)

பாசத்தின் இருப்பிடம்
பண்பின் உறைவிடம் - பெண்மை
சாயத்தின் வடிவமே
வணங்கி நிற்கின்றோம்
ஆண்பிள்ளை பெற்றெடுத்தாய் - ஆனாலும்
நீபட்ட துயரம் கணக்கிலிடமுடியுமா
கவலைகளை சுமந்து நின்றாய்
சித்திரமே என் தாயே
சினம் என்று உம் முகத்தில் நாம் அறியோம்
அன்போடு உணவூட்டி - அறிவுரைகள் பல சொல்லி - இன்று
பெயர் சொல்ல வாழ வைத்தாய்
பேதலித்து நிற்கின்றோம்!
எங்கு நீ சென்றுவிட்டாய்?

## லிங்கம் (சற்குணலிங்கம்)

கண்ணீர்த்துளிகள் கரைந்தோட
என்னை நொந்து உன்னை நான் தேடுகின்றேன்
அன்னையே! எங்கு சென்றாய் - உன்
அருகிருந்து ஆற்றும் பணி நான் மறந்தேன் - அம்மா
வெகுதூரம் சென்று விட்டேன் - வெதும்புகின்றேன்
அன்புருக்கொண்டவளே!
எத்தனை அறிவுரைகள் கூறிநின்றாய்
அத்தனையும் உண்மை என்று நான் உணர்ந்தேன்
சத்தியமாய் உன் விருப்பம் நிறைவேற
என் மனதில் உறுதி இன்று கொண்டேனம்மா
வித்தகமே! தனித்துவமே ஓடிவந்தேன்
எமைவிட்டு விண் சென்றாய் நியாயம் தானோ.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்கள்

பத்துமாதம் சுமக்கவில்லை எம்மை - எனினும்
பாசமான தாய் அல்லவோ எமக்கு நீங்கள்
சத்தியத்தின் உருவாக வந்த நின்றீர்
சாத்வீக வாழ்வுதனை உரைத்து தந்தீர்
முற்பிறப்பில் நாம் செய்த தவப்பயனால்
முழுமைபெற வழிசெய்த எங்கள் மாமி - நாம்
எப்பிறப்பில் இனி உம்மை காண்போம்
எம்முள்ளம் கலங்குதையே வந்து பேசீர்.

## பேரப்பிள்ளைகள்

அம்மம்மா..... அப்பம்மா.........
என்று நாம் அழைத்து நின்றால்
என்னம்மா என்னப்பா என்று எமை
வாரியணைத்து கதை சொல்வாய்
எலிசபெத் மகாராணி உன் வாழ்க்கைக்
குறிப்போடு இணைந்ததை கூறி நின்றாய்
இதமான கதைகளுடன் அறிவுரையும்
இணைந்து பதமாக எம்முடன்
பகிர்ந்து நின்றாய்
சிங்களம், ஆங்கிலம் மொழிகளுடன்
உரையாடி எம்மை திகைப்பூட்ட வைத்திடுவாய்
சிசுவாக உன் கையில் தவழ்ந்த எம்மை
பருவம் குறையாது வளர்த்து நின்றாய்
தாய்க்கு தாயாக தரணியிலே
விளங்கிய பாட்டி உமை நாம்
எப்படி மறப்போம்
பாலகர்கள் நாம் அழைக்கின்றோம்
பரிவுடன் மீண்டும் வாராயோ.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# We Miss You more

Your gentle face and patient smile
With sadness we recall
You had a Kindly word for each
And died beloved by all
The voice is mute and stilled
The heart that loved us well and true
Ah, bitter was the trial to part
From one so good as you
You are not forgotten loved one
Nor will you ever be
As long as life and Memory last
We remember thee
We miss you now, our hearts are sore,
As time goes by we miss you more,
Your loving smile, your gentle face
No one can fill your vacant place.

Grand children
Kobi, Jathu, Yuwast

## பூட்டப்பிள்ளைகள்

பூட்டியே.............
எம் அன்னையின் - வடிவழகே!
கூட்டியே அன்பை
பொழிந்து நின்ற திருவுருவே
வெளிநாடு, உள்நாடு
எங்கு நாம் சென்றாலும்
உலகங்கள் கடந்து
உம் அன்பு எமை அணைக்கும்
சித்திரப்பதுமையே......
சிங்கார நாச்சியாரே.....
எத்தனை ஜென்மம் எடுத்தாலும் நாம் மறவோம்
இனிக்க சிரியாயே ஒரு தரம்
எம்மருகில் வந்து...........!
நித்திரைக்குச் செல்ல நாம்
நினைப்போம் உம் அன்பை
முத்திரை பதிந்து நிற்கும் - உம்
முத்தம் எங்கே?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேற்றம்

நிற்பதுவே நடப்பதுவே பறப்பதுவே
நீங்களெல்லாம் சொப்பனந்தானோ
பல தோற்ற மயக்கங்களோ!

கற்பதுவே கேட்பதுவே கருதுவதே
நீங்களெல்லாம் அற்ப மாயைகளோ?
உம்முள் ஆழ்ந்த பொருளில்லையோ!

வானகமே இளவெயிலே மரச்செறிவே
நீங்களெல்லாம் கானலின் நீரோ?
வெறும் காட்சிப்பிழைதானோ?

போனதெல்லாம் கனவினைப் போல்
புதைந்தழிந்தே போனதனால்
நானும் ஓர் கனவோ?
இந்த ஞாலமும் பொய்தானோ

காலமென்றே ஒரு நினைவும்
காட்சியென்றே பல நினைவும்
கோலமும் பொய்களோ
அங்கு குணங்களும் பொய்களோ

காண்பதெல்லாம் மறையுமென்றால்
மறைந்ததெல்லாம் காண்பமன்றோ
நானும் ஓர் கனவோ
இந்த ஞாலம் பொய்தானோ

சுப்பிரமணிய பாரதியார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்

1926.09.06

மறைவு

2014.12.08

(எமது பாடசாலையின் பகுதித்தலைவர் திருமதி சற்குணதிலகம் வேணுகோபாலன் வாணிதாசன் அவர்களின் பாசமிகு தாயார் )

## அமரர் திருமதி சதாசிவம் பத்மாவதி

அன்பு காட்டி அரவணைத்து
அறிவுரைகள் பல கூறி
எம்மை ஆளாக்கிய
எம் அன்னையே...!

என்மர நாமிருந்தும்
ஆறுதல் காணவில்லை
ஏங்கித் தவிக்கும் எங்களை விட்டு
எங்குதான் சென்றீரோ...?

அறுவருடன்
அகிலமதில் எம்மைப்
பெற்றெடுத்த
பாசமிகு தாயே...!

உம் ஆசைமுகம் காண
ஏங்குதம்மா எம் மனசு
ஆறுதல் கூறிட
ஒரு முறை வாரீரோ...?

பாசத்தின் உறைவிடமே
எம் பாசமிகு - தாயே!

உம் அரவணைப்பில்
துள்ளி மகிழ்ந்த
பிஞ்சுப் பாலகர் உம்
பேரக்குழந்தைகளின்
அஞ்சலைப் போக்கிடவே
எம்மிடத்தே ஒரு முறை வாரீரோ?

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி

அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசார் ஊழியர்கள்,
நலன்புரிச்சங்கத்தினர்.

யா/ வட. இந்து மகளிர் கல்லூரி

தமிழ்ப்பூங்கா, தெல்லிப்பழை. 021 2264014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் கண்மூடித் தூங்கையிலே - உன்
தொலைந்தவளே அம்மா!
உனக்கு ஆயிரம் கோடி நமஸ்காரம்
- வைரமுத்து -

மறுபிறவி இருந்தால் செருப்பாகப் பிறக்க வேண்டும் என் அம்மா!
காலில் மிதிபட அல்ல!
என்னை சுமந்தவளை ஒரு தரமாவது
நான் சுமக்க
- வைரமுத்து -

அகிலத்தின் அவதாரம்!
அன்புக்கு அடையாளம்
ஓர் உடல் உலகத்தில்
ஈருயிர் இவள் அன்றோ
- வைரமுத்து -

வலியினை சுமந்து வளர்த்தாய்
கருவினை உணர்வுகள் விதைத்தாய்
உழவனும் நீயன்றோ!

ஈரைந்து மாதங்கள்
ஈடில்லா ஆசைகள்
மனதோடு தான் வைத்து
மழலையை ஈன்றாயே!

பாசத்தில் பசி ஆறி
பட்டினியை நீ தாங்கி
பாலூட்டி வளர்த்தாயே
பாரந்தன் பாராமல்!
- வைரமுத்து -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2015

## January

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

## February

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |

## March

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

## April

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | | |

## May

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 31 | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

## June

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## July

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

## August

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 30 | 31 | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

## September

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | | | |

## October

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

## November

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | | | | | |

## December

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசேடதினங்கள்

### January (தை)

திகதி

1 - சுவர்க்காயில் ஏகாதசி
4 - பூரணை விரதம்
9 - சங்கடஹர சதுர்த்தி
15 - தைப்பொங்கல்
23 - சதுர்த்தி விரதம்
28 - கார்த்திகை விரதம்

### February (மாசி)

திகதி

3 - தைப்பூசம் (பூரணை)
4 - தேசிய தினம்
7 - சங்கடஹர சதுர்த்தி
17 - மஹா சிவராத்திரி
22 - சதுர்த்தி விரதம்
25 - கார்த்திகை விரதம்

### March (பங்குனி)

திகதி

4 - மாசி மகம்
5 - பூரணை விரதம்
23 - சதுர்த்தி
24 - கார்த்திகை விரதம்

### April (சித்திரை)

திகதி

3 - பங்குனி உத்தரம்
4 - பூரணை விரதம்
14 - தமிழ் சிங்கள புத்தாண்டு (மன்மத வருடப்பிறப்பு)
20 - கார்த்திகை விரதம்
21 - அக்சய திருதியை
22 - சதுர்த்தி

### May (வைகாசி)

திகதி

1 - மேதினம்
2 - சித்திரா பூரணை, வெசாக்
7 - சங்கடஹரசதுர்த்தி
18 - கார்த்திகை விரதம்
21 - சதுர்த்தி

### June (ஆனி)

திகதி

1 - வைகாசி விசாகம் வற்றாப்பளை கண்ணகை அம்மன் பொங்கல்
2 - பூரணை விரதம்
14 - கார்த்திகை விரதம்
15 - புதூர் நாகதம்பிரான் பொங்கல்
17 - நயினாதீவு நாகபூசணி அம்மன் கொடி
20 - சதுர்த்தி
24 - ஆனி உத்தரம்

### July (ஆடி)

திகதி

1 - பூரணை விரதம்
5 - சங்கடஹர சதுர்த்தி
8 - அல்வாய் மாலை சந்தைப்பிள்ளையார் கொடி
11 - கார்த்திகை விரதம்
16 - கதிர்காமம் கொடி
17 - அல்வாய் வேவிலந்தை முத்துமாரி கொடி
18 - றம்ழான்
19 - சதுர்த்தி
31 - பூரணை விரதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## August (ஆவணி)

திகதி

3 - சங்கடஹர சதுர்த்தி

8 - கார்த்திகை விரதம்

14 - ஆடி அமாவாசை விரதம்

16 - ஆடிப்பூரம்

17 - தெல்லிப்பளை துர்க்கா தேவி கொடி

18 - நாகசதுர்த்தி

19 - நல்லூர் கந்தசுவாமி கொடி

25 - ஆவணி மூலம்

28 - நல்லூர் கந்தசுவாமி மஞ்ஞம் வரலக்ஷ்மி விரதம்

29 - பூரணை விரதம்

## September (புரட்டாதி)

திகதி

4 - கார்த்திகை விரதம்

6 - ஸ்ரீ கிருஸ்ண ஜெயந்தி

10 - நல்லூர்க்கந்தசுவாமி சப்பறம்

11 - நல்லூர்க்கந்தசுவாமி தேர்

12 - நல்லூர் கந்தசுவாமி தீர்த்தம்

17 - விநாயக சதுர்த்தி விரதம்

24 - ஹஜ்பெருநாள்

27 - பூரணை விரதம்

## October (ஐப்பசி)

திகதி

1 - கார்த்திகை விரதம் சங்கடஹரசதுர்த்தி

13 - நவராத்திரி விரத ஆரம்பம்

16 - சதுர்த்தி விரதம்

19 - சரஸ்வதி பூஜாரம்பம்

21 - சரஸ்வதி பூசை

22 - கேதார கௌரி விரத ஆரம்பம்

27 - பூரணை விரதம்

29 - கார்த்திகை விரதம்

30 - சங்கடஹர சதுர்த்தி

## November (கார்த்திகை)

திகதி

10 - தீபாவளி

11 - கேதாரகௌரி விரதம்

12 - ஸ்கந்தஷஷ்டி விரதாரம்பம்

15 - சதுர்த்தி விரதம்

25 - பூரணை விரதம் சர்வாலயதீபம் (வீடுகளில்) திருக்கார்த்திகை விரதம்

26 - விஷ்ணுவாலயதீபம் விநாயகவிரதாரம்பம்

29 - சங்கடஹர சதுர்த்தி

## December (மார்கழி)

திகதி

15 - சதுர்த்தி விரதம்

16 - விநாயகஷஷ்டி விரதம்

17 - திருவெம்பாவை பூஜை ஆரம்பம்

21 - சுவர்க்கவாயில் ஏகாதசி விரதம்

22 - கார்த்திகை விரதம்

25 - பூரணை விரதம்

29 - சங்கடஹரசதுர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயம் கனிந்த நன்றிகள்



எங்கள் குடும்ப விருட்சம் சுகவீனமுற்றிருந்த வேளை அவ்வப்போது வேண்டிய உதவிகள் புரிந்த சுற்றத்தாருக்கும், அவர் உயிர்நீத்த செய்தி அறிந்து தங்கள் கடமை என எண்ணி உதவிகள் புரிந்தோருக்கும், இறுதிக்கிரியைகள் செவ்வனே நடைபெற உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும். மற்றும் கண்ணீர் அஞ்சலி, மலர்வளையங்களை சமர்ப்பித்து அஞ்சலி செலுத்தியோருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் மரணச் செய்திகேட்டு தொலைபேசி மூலமாகவும், மின்னஞ்சல் மூலமாகவும் Face book மூலமாகவும் ஆறுதலும், அனுதாபமும் தெரிவித்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகளில் பங்குபற்றியோர் அனைவருக்கும், நினைவு மலர் எழுதுவதற்கு உதவிய அன்பு உள்ளங்களுக்கும், இந்த நினைவுமலரை நல்லமுறையில் அச்சிட்டு வழங்கிய தமிழ்ப்பூங்கா அச்சகத்தினருக்கும் எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்


மடத்தடி,
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்?
அது வீணாகுவதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகிறது.



இந்த மாற்றம் உலக நியதியாகும்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

T.P-25

தமிழ்ப்பு[illegible]கா அச்சகம் - 021 226 4014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org